**கவனிக்க.-** *2017.09.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2038 - 2017 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2017.09.22**

*2038 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | | | |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 1484 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1476 | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1482 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1484 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-ஒதுக்கீடு சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகுந் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2017 இன் இல. 1093*

MOD/DEF/02/01/ARF/PRO/MAG. GEN/12.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக் கப்பட்ட இளைப்பாறுதல் மற்றும் இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையின் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2017, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஜெனரல் வில்லந்தர கமகே லால் பத்மகுமார, பீஎஸ்சீ, எச்டீஎம்சீ (உ/60394)

### இலங்கைத் தரைப்படை நிரந்தரப் படையின் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

கீழ்க்காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2017, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையின் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஜெனரல் வில்லந்தர கமகே லால் பத்மகுமார, பீஎஸ்சீ, எச்டீஎம்சீ (உ/60394)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஒகத்து 31.

9-451/3

---

*2017 இன் இல. 1094*

MOD/DEF/02/01/ARF/PRO/MAJ GEN/12.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள் மற்றும் பதவியை விட்டு விலக்குதலும் புதிய பதவிக்கு நியமித்தலும்

### பதவி உயர்வுகள்

1. கீழ்க்காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களை அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

(1) 2017, யூலை 31 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தற்காலிக மேஜர் ஜெனரல் தரத்திற்கு :

பிரிகேடியர் ஏ. எஸ். டீ. லியனகே, பீஎஸ்சீ, எல்எஸ்சீ (உ/60392)

(2) 2017, ஓகத்து 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மேஜர் ஜெனரல் தரத்திற்கு :

பிரிகேடியர் டபிள்யூ. ஜீ. எல். பத்மகுமார, பீஎஸ்சீ, எச்டீஎம்சீ (உ/60394)

### பதவியை விட்டு விலக்குதலும் புதிய பதவிக்கு நியமித்தலும்

2. கீழ்க்காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பதவியை விட்டு விலக்குதலும் புதிய பதவிக்கு நியமித்தலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

(1) பிரிகேடியர் (தற்காலிக மேஜர் ஜெனரல்) ஏஎஸ்டீ லியனகே பீஎஸ்சீ, எல்எஸ்சீ (உ/ 60392) - 2017, யூலை 31 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இராணுவ தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து இயக்குநர் பதவியை விட்டு விலக்குதலும் நிதி முகாமைத்துவ இயக்குநர் ஜெனரல் பதவிக்கு நியமித்தலும்.

(2) மேஜர் ஜெனரல் டபிள்யூ. ஜீ. எல். பத்மகுமார, பீஎஸ்சீ, எச்டீஎம்சீ (உ/ 60394) - 2017, ஓகத்து 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கை இராணுவ தொண்டர் படை தலைமையகத்தின் பிரிகேடியர் (நிருவாகம் மற்றும் படைவீரர் தங்குமிடம்) பதவிக்கு பதவியை விட்டு விலக்குதலும் மாஸ்டர் ஜெனரல் இராணுவ உபகரணங்கள் பதவிக்கு நியமித்தலும்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஒகத்து 31.

9-451/2

MOD/DEF/02/01/ARF/PRO/ MAG GEN/12.

**இலங்கைத் தரைப்படை – நிரந்தரப்படை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இளைப்பாறுதல் மற்றும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றல் தொடர்பான அறிவித்தலை இரத்துச் செய்தல்

2017, யூலை 21 ஆந் திகதிய 2029 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் சிரேஷ்ட உத்தியோகத்தரின் இளைப்பாறுதல் மற்றும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றல் தொடர்பான அறிவித்தல் 2017 இன் இல. 870 (MOD/DEF/02/01/ARF/RET/1467) யினை இரத்துச் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் வில்லந்தர கமகே லால் பத்மகுமார, பீஎஸ்சீ, எச்டீஎம்சீ (உ/60394)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9-451/1

---

2017 இன் இல. 1095

MOD/DEF/02/01/ARF/RET/1490.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதலும் மற்றும் இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையின் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தலும்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2017, திசெம்பர் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் கேர்ணல் (உபகரண நிருவாகம்) சாலன் கபுகே ரம்யலால், இஇமப (உ/61924)

**நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

கீழ்க்காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2017, திசெம்பர் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் கேர்ணல் (உபகரண நிருவாகம்) சாலன் கபுகே ரம்யலால், இஇமப (உ/61924)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9-494

---

2017 இன் இல. 1096

MOD/DEF/02/01/ARF/RET/1489.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2017, நவெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்டன் சிங்ஹலகே ஜயசூரிய அமரசிங்ஹ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, இசிப (உ/67130)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9-493

*2017 இன் இல. 1097*

MOD/DEF/03/02/PRO/RNF/ 04/ 05.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுபடுத்துதல்

*2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதியிலிருந்து தற்காலிக ரியர் அத்மிரால் தரத்திற்கு :*

கொமதோரு உதய பிந்து சுமணசேகர, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, இகப-என்ஆர்எக்ஸ் 0235

*2017, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து தற்காலிக ரியர் அத்மிரால் தரத்திற்கு :*

கொமதோரு வனிக ஆரச்சிகே சுஜீவ சிரினாத்த பெரேரா, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ, இகப - என்ஆர்எக்ஸ் 0255

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9-496

---

*2017 இன் இல. 1098*

MOD/DEF/03/02/RNF/ 04/ 04.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுபடுத்துதல்

*2017, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து தற்காலிக ரியர் அத்மிரால் தரத்திற்கு :*

கொமதோரு உஸ்ஹெட்டிகே சுஜீவ ருவன் பெரேரா, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ, இகப - என்ஆர்எக்ஸ் 0321

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9-495

*2017 இன் இல. 1099*

MOD/DEF/03/02/PRO/RNF/ 01/11.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுபடுத்துதல்

*2017, மே மாதம் 10 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்துக்கு :*

லெப்டினன்ட் றத்நாயக முதியன்சேலாகே திமுது பிரசன்ன தேசப்பிரிய, என்ஆர்எக்ஸ் 2440, இகப

*2017, மே மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (இ) தரத்துக்கு :*

லெப்டினன்ட் (இ) கவிசேகர முதியன்சேலாகே நுவன் கவிசேகர, என்ஆர்ஈ 2449, இகப

*2017, மே மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வி) தரத்துக்கு :*

லெப்டினன்ட் (வி) எதுசுரிய ஆரச்சிகே சிறிமால் ஹஸாந்த விஜேசிங்ஹ, என்ஆர்எல் 2454, இகப

*2017, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்துக்கு :*

லெப்டினன்ட் சம்மு கிஸாந்த பிரதீப் குமார, என்ஆர்எக்ஸ் 2443, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, யூலை 13.

9-580

---

*2017 இன் இல. 1100*

MOD/DEF/03/02/EX.

**இலங்கைக் கடற்படை - தொண்டர் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

2017, ஓகத்து 17 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் கீழ்க் காணப்படும் பெயர் உள்ள அதிகாரி இலங்கை கடற்படை

தொண்டர் கடற்படைப் பிரிவில் இருந்து தொண்டர் கடற்படை உபசேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் (தொண்டர்) றணசிங்ஹகே விஜேபால றனசிங்ஹ என்வீஎக்ஸ் 5407, இதொகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, யூன் 28.

9-579

---

2017 இன் இல. 1101

MOD/DEF/10/03/RET/177.

## இலங்கை வான்படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர உபசேவைக்கு மாற்றப்படுதல்

கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரி 2017, செத்தெம்பர் 24 ஆந் திகதி தொடக்கம் நிரந்தர வான் படைசேவையிலிருந்து நிரந்தர உப சேவைக்கு மாற்றப்படுகின்றார் :-

எயார் வைஸ் மார்ஷல் ஜானக பிரசன்ன வனிகதுங்க (01416) - மின்னியல் பொறியியல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 584/2

---

2017 இன் இல. 1102

MOD/DEF/10/03/RET/177.

## இலங்கை வான்படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2017, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுகிறார்:-

எயார் வைஸ் மார்ஷல் ஜானக பிரசன்ன வனிகதுங்க (01416) - மின்னியல் பொறியியல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 584/1

---

2017 இன் இல. 1103

MOD/DEF/10/03/PRO/03.

## இலங்கை வான்படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து குரூப் கப்டன் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-

தற்காலிக குரூப் கப்டன் நிலூகா தயானி பெர்னட் அபயசேகர,(01876) மருத்துவம் - 2017.09.01
தற்காலிக குரூப் கப்டன் கமகே ஹர்ச பிரியந்த நானயக்கார (01733) நிர்./ரெஜி - 2017.09.01
தற்காலிக குரூப் கப்டன் மகவிடகே ஜீட் ரொன்னீ பெரேரா (01751) மின்/பொறி - 2017.09.21

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 578

*2017 இன் இல. 1104*

MOD/DEF/10/03/PRO/3T.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரின் பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக குரூப் கப்டன் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகின்றார் :-*

*விங் கமாண்டர் சேனாதீர பதிரன்னெஹெலாகே வஜிர குமார சேனாதீர (01956) நிர்/ரெஜி - 2017.07.01*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2017, ஓகத்து 31.*

*9 - 448*

---

*2017 இன் இல. 1105*

MOD/DEF/10/03/PRO/13.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் (போரில் காயமடைந்த ) அவரின் பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து விங் கொமாண்டர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் :-*

*ஸ்கொட்ரன் லீடர் தனுஸ்க பிரதீப் தலகெடிய (02194) நிர்/ரெஜி- 2017.12.30*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2017, செத்தெம்பர் 06.*

*9 - 577*

*2017 இன் இல. 1106*

MOD/DEF/10/03/PRO/2T.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக விங் கொமாண்டர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகின்றார்கள் :-*

*ஸ்கொட்ரன் லீடர் சமிந்த தொடன்தெனிய (02166) தொழி. பொறி - 2017.03.23*
*ஸ்கொட்ரன் லீடர் மீவிடி ஆராச்சிகே டொன் சமில இரங்க குணசிங்க (02261) தொழி. பொறி - 2017.07.25*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2017, ஓகத்து 31.*

*9 - 450*

---

*2017 இன் இல. 1107*

MOD/DEF/10/03/PRO/01.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து ஸ்கொட்ரன் லீடர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-*

*தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் துய்யதுர நிர்மல் பிரபாத் டி சில்வா (02379) தொழி. பொறி - 2017.09.01*
*தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் ஜெயகொடி ஆராச்சிகே சுமித் பிரியங்கர (02553) நிர். ரெஜி- 2017.10.07*

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் பிரன்சிஸ்கு ஹெடிகே அமில சுரஞ்சன் சில்வா (02551) நிர் - 2017.10.07

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் சரித் சதுரங்க தல்பே கமகே (02608) தொழி. பொறி - 2017.12.04

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் கடவத்தகம எதுகலகே நவீன் தனுஸ்க குணரத்ன (02609) தொழில்.பொறி - 2017.12.04

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 581

---

2017 இன் இல. 1108

MOD/DEF/10/03/RET/178.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2018, சனவரி மாதம் 30 ஆந் திகதி இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறு கிறார்:-

ஸ்கொட்ரன் லீடர் காரியப்பெரும முதியன்சலாகே சாகர விஜித குமாரகாரியப்பெரும (02090) - நிர்வாகம் ரெஜிமென்ட்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 585

2017 இன் இல. 1109

MOD/DEF/10/03/PRO/1T.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரின் பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் :-

பிளைட் லெப்டினன்ட் உடுகலகே தம்மிக ஆரியசேன (02427) இ. வா. - 2017.01.20

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 582

---

2017 இன் இல. 1110

MOD/DEF/10/03/PRO/IT.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் கள் :-

பிளைட் லெப்டினன்ட் நரன்கொடுவே அலுத் கெதர சாந்த பிரிய ஒபேசேகர (02729) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் அகலகொடுவே முதியன்சலாகே நிசாந்த இந்திக விக்ரமசிங்க (02730) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் சந்ரசேகர முதியன்சலாகே சானக பண்டார சந்ரசேகர (02732) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் செம்புகுட்டிகே சமிந்த லக்மல் சேனாரத்ன (02733) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் பல்லியகுருகே உபுல் குமார (02734) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் ரத்னமலல இருகல் பண்டாரலாகே ரத்னாயக்க (02736) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் விஜேசூரிய முதியன்சேலாகே சஞ்ஜீவ சம்பத் விஜேசூரிய (02737) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் சாமில் பிரசன்ன கோபினுவலகே (02738) நிர்/ரெஜி - 2017.09.25

பிளைட் லெப்டினன்ட் வன்னிஆரச்சிகே தொன் சஞ்சய ரவினாத வன்னிஆரச்சி (02744) மின்./பொறி - 2017.11.05

பிளைட் லெப்டினன்ட் சமிர ஏரந்த நெத்திகுமார (03490) மரு./நிர். - 2017.11.14

பிளைட் லெப்டினன்ட் லீலங்கி நிரோதா ரந்தெனி (03492) சட்./நிர். -2017.11.14

பிளைட் லெப்டினன்ட் ஹேவ அலங்காரகே ருவன் நிர்மல் விக்ரமரத்ன (03493) சட்./நிர். - 2017.11.14

பிளைட் லெப்டினன்ட் ராஜகருணா அபயரத்ன ஹேரத் முதியன்சலாகே சந்தன திலக நவகத்தேகம (02768) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் ஜயசிங்க ஆராச்சிகே ஸ்ரீலால் ஜயசிங்க (02770) நிர்/ரெஜி - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் ஹங்கிலி கெதர டிலந்த சஜித் ஆரியதாச (02771) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் கொட்டயாலகே ரோஹித லக்ஸ்மன் (02772) நிர்/ரெஜி - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் ரசிக தூமிந்த வீரரத்ன ஜயசூரிய (02773) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் விதானயலாகே கெதர புத்திக சஞ்ஜீவ பெதியாகொட (02775) நிர்/ரெஜி - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் முதுன்கொடுவே தசனாயக்க முதியன்சலாகே ரனவன்ச பண்டார தசனாயக்க (02776) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் பிடவெல ஜானக விஜேந்ர லகஸ்மன் பிட்டவெல (02777) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் சஞ்ஜீவ பிரியன்கர தேவகே (02778) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் முகமட் அப்துல்லாஃ அப்துல் கபூர் (02780) நிர்வாகம் - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் மத்துமகே டொன் உபுல் பிரியந்த குணவர்தன (02781) நிர்/ரெஜி - 2017.12.29

பிளைட் லெப்டினன்ட் யடவர புலத்வத்தே வலவ்வே திசானாயக முதியன்சலாகே சதுர்வர்ன விலுதானி யட்டவர (OW/01087) தொழில்/பொறி - 2017.12.31

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, செத்தெம்பர் 06.

9 - 583

---

2017 இன் இல. 1111

MOD/DEF/10/03/TRN/01/2017.

## இலங்கைத் தொண்டர் வான்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக் கப்பட்ட நிரந்தர வான்படைக்கு மாற்றுதல்

2017 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் இலங்கைத் தொண்டர் வான்படையின் கீழ் தரப்பட்டுள்ள அதிகாரியை நிரந்தர வான்படைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் தெல்கொட லியனகே சதாரா சதுரங்க லியனகே (வி/0522) - பல் சிகிச்சை பிரிவு

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2017, ஓகத்து 31.

9 - 449

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2017 இன் இல. 1112

## இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை

இராணுவத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை உறுதிப்படுத்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை 2017, மாச்சு 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கப்டன் தரத்தில் உறுதிப்படுத்துதல் இராணுவத் தளபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்டன் வன கியனகே சுரேஷ் சமிந்த, கெகாப (உ/4931)

ஏ டபிள்யூ ஜே சீ த சில்வா,
ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இராணுவத் தலைமையகம்,
கொழும்பு,
2017, மே 30.

9-431/1

*2017 இன் இல. 1113*

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

இராணுவத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட
தரத்தினை உறுதிப்படுத்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை 2017, ஏப்பிறல் 26 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கப்டன் தரத்தில் உறுதிப்படுத்துதல் இராணுவத் தளபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்டன் சியசிங்ஹ முதியன்சேலாகே ரவிந்தர ராமனாயக, இசிப (உ/7496)

என். யூ. எம். எம். டபிள்யூ. சேனாநாயக,
ஆர்டப்ளியூபீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இராணுவத் தலைமையகம்,
கொழும்பு,
2017, யூலை 27.

9-431/2

---

*2017 இன் இல. 1114*

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

இராணுவத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட
தரத்தினை உறுதிப்படுத்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை 2017, யூலை 31 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கப்டன் தரத்தில் உறுதிப்படுத்துதல் இராணுவத் தளபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்டன் சோமரத்னகே அஜித் குமார சோமரத்ன, இஇகாப (உ/7531)

ஏ டபிள்யூ ஜே சீ த சில்வா,
ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இராணுவத் தலைமையகம்,
கொழும்பு,
2017, மே 30.

9-431/3

---

*2017 இன் இல. 1115*

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

இராணுவத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட
தரத்தினை உறுதிப்படுத்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை 2017, ஓகத்து 31 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கப்டன் தரத்தில் உறுதிப்படுத்துதல் இராணுவத் தளபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்டன் வகபேலி கெதர சுனில் குமார, இஇகாப (உ/6924)

ஏ டபிள்யூ ஜே சீ த சில்வா,
ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இராணுவத் தலைமையகம்,
கொழும்பு,
2017, யூன் 22.

9-431/4

---

*2017 இன் இல. 1116*

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

இராணுவத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்ட
தரத்தினை உறுதிப்படுத்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை 2017, ஒற்றோபர் 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கப்டன் தரத்தில் உறுதிப்படுத்துதல் இராணுவத் தளபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்டன் வீரசிங்க முதியன்சேலாகே சுதத் ஆனந்த வீரசிங்க, இதேபாப (உ/5108)

ஏ டபிள்யூ ஜே சீ த சில்வா,
ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இராணுவத் தலைமையகம்,
கொழும்பு,
2017, யூன் 22.

9-431/5

# அரசாங்க அறிவித்தல்கள்

## ஆயித்தியமலை சதா சகாய மாதா ஆலய வருடாந்த உற்சவம் - 2017

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991, நவெம்பர் 1 ஆந் திகதிய, 687ஆம் இலக்க கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் யாத்திரைகைகள் கட்டளைச் சட்டத்தின் (175ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் கீழ் ஆயித்தியமலை சதா சகாய மாதா ஆலய வருடாந்த திருவிழாக் கொண்டாட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் (ஓகத்து) 2017.08.25 ஆந்திகதியிலிருந்து (செத்தெம்பர்) 2017.09.03 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

எஸ். சுதாகர்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மண்முனை மேற்கு,
வவுணதீவு.

9-428

## வலஸ்முல்ல சித்தம்கல்லென ரஜமகா விகாரையின் எசல மஹா பெரஹர

ஊர்வலக் கட்டளை

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் 175 ஆவது நீதிமன்ற சட்டமூலமாக்கப்பட்ட யாத்திரைகைகள் கட்டளைச் சட்ட இரண்டாவது சரத்தில் சட்டமாக்கப்பட்ட கட்டளை பிரகாரம் வலஸ்முல்ல பிரதேச செயலாளர் ஐ. ஆர். கே. விதாரன ஆகிய நான் கீழ் வருகின்ற காலத்தினை வலஸ்முல்ல சித்தம்கல்லென ரஜமகா விகாரையின் யாத்திரைகைகள் கட்டளை சட்டத்தின்படி பிரமாண விதிமுறைகள் நடைமுறைப்படுகின்ற காலமாக நியமிக்கின்றேன்.

2017 ஆம் ஆண்டின் பெரிய எசல பெரஹர ஊர்வலக் கொண்டாட்டம் 2017.10.01 ஆந் திகதியிலிருந்து 2017.10.07 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வலஸ்முல்ல.

9-545

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2017, யூன் 29 ஆந் தேதியின்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 11 இல் எஸ்ஜஓ இன்டர்நஷனல் ரிக்குரூட்மென்ட் ஏஜென்சி என்ற பெயர்மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தொழில் கொண்டுநடாத்துகின்ற கொழும்பைச் சேர்ந்த அனோமா பஞ்ஜாசரம் திருமணத்துக்குமுன்னர் கஸ்தூரியாராச்சி என்பவர், (டீஎவ்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் அடுத்துறுநரான) எல்லாம் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே. பி. ஏ. பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.14 ஆந் தேதிய 1728 ஆம் இலக்க் ஈட்டுமுறிமீதும், பிரசித்த நொத்தாரிசு டீ. ஐ. என். திலக்கரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 2015.07.16 ஆந் தேதிய 497 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், பிரசித்த நொத்தாரிசு டீ. ஐ. என். திலக்கரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.16 ஆந் திகதிய 499 ஆம் இலக்க ஈட்டு முறி மீதும், பிரசித்த நொத்தாரிசு டீ. ஐ. என். திலக்கரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.02 ஆந்தேதிய 607 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், பிரசித்த நொத்தாரிசு டீ. ஐ. என். திலக்கரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.02 ஆந் தேதிய 609 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துதலில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

அத்துடன் 2017, ஏப்பிறல் 30 ஆந் தேதியன்றுள்ளவாறாக மூன்று கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்துப் பதினான்காயிரத்து நானூற்றியிருபத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 3,54,14,426.46) கொண்ட தொகையும், 2017, மே 01 ஆந்தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஒரு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து முந்நூற்றி ஏழு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூபா 1,28,73,307.65) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6.0%) வட்டியும் (ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு தசம் ஐந்து சதவீத (ஆண்டொன்றுக்கு 12.5%) அடிமட்ட வீதத்துக்கமைய), மற்றும் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்துப் பதினேழாயிரம் ரூபா (ரூபா 1,93,17,000.00) கொண்ட தொகை மீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6.0%) வட்டியும் (ஆண்டொன்றுக்குப் பதினான்கு

சதவீத (ஆண்டொன்றுக்கு 14.0%) அடிமட்ட வீதத்துக்கமைய), மேற்கூறப்பட்ட 1728, 497, 499, 607, 609 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது சொல்லப்பட்ட அனோமா பஞ்ஜாசரம் திருமணத்துக்கு முன்னர் கஸ்தூரியாராச்சி என்பவரிடமிருந்து டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்குச் சேர்மதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும். டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1728, 497, 499, 607, 609 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, மூன்று கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து பதினான்காயிரத்து நானூற்றியிருபத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 3,54,14,426.46) கொண்ட தொகையையும், 2017 மே 01 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஒரு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து எழுபத்திமூன்றாயிரத்து முந்நூற்றியேழு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூபா 1,28,73,307.65) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சாரசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6.0%) வட்டியையும் (ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு சதம் ஐந்து சதவீத (ஆண்டொன்றுக்கு 12.5%) அடிமட்ட வீதத்துக்கமைய), மற்றும் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்துப் பதினேழாயிரம் ரூபா (ரூபா 1,93,17,000.00) கொண்ட தொகைமீது ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சாராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6.0%) வட்டியையும் (ஆண்டொன்றுக்குப் பதினான்கு சதவீத (ஆண்டொன்றுக்கு 14%) அடிமட்ட வீதத்துக்கமைய), அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட அனோமா பஞ்ஜாசரம் திருமணத்துக்கு முன்னர் கஸ்தூரியாராச்சி என்பவரினால் மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகளின்மூலம் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

### 497, 499, 609 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியன கோறளையின் கங்கபட பத்துவில் அத்தனகல்ல பதிவுப் பிரிவினுள்ளும் ஹலும்மஹர கிராம அலுவலர் பிரிவினுள்ளும் தொம்பே பிரதேச செயலகத்தினுள்ளும் தொம்பே பிரதேச சபை எல்லைகளினுள்ளும் ஹலும்மஹர கிராமத்தில் அமைந்துள்ளதும் அதன்மீதுள்ள பண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் கஹட்டகஹவத்தேகொட்டச எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. எச். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.04.22 ஆந்தேதிய 4484 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டங்கள் 1, 2 மற்றும் 3 இன் ஒன்று சேர்க்கையாகவுள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. டபிள்யு. கார்வல்ஹோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.08.30 ஆந்தேதிய 112/2009 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் X எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் X பின்வரும் எல்லைகளை யுடையது - வடகிழக்கு : எச். எம். ஏ. நிஹாலின் ஆதனம்; தென்கிழக்கு: எம். பி. எஸ். விஜயரத்னவின் ஆதனம் (155/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம்); தென்மேற்கு: அஹுகம்மானவிலிருந்து கேரகலவுக்குச் செல்லும் வீதி மற்றும் ; வடமேற்கு : எச். எம். ஏ. குணதிலக்கவின் ஆதனம்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 112/2009 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட் பதினெட்டுத் தசம் ஒன்பது ஆறு பேர்ச்சுக்களை (0ஏ. 2றூ. 18.96பே.) கொண்டுள்ளதுடன் அத்தனகல்லக் காணிப் பதிவகத்தில் தலைப்பு G 222/58 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுமுள்ளது.

### 607, 1728 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் கொழும்பு மாநகரசபையினுள்ளும் வெள்ளவத்தை வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வட்டார இல. 14 இல் (முன்னர் கொட்டாஞ்சேனை வட்டாரம்) வெள்ளவத்தை வடக்கில் பிரெட்ரிக்கா வீதியில், 03-8/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. கனகசிங்கம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.02.11 ஆந் தேதிய 3065 ஆம் இலக்க கூட்டாதன வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் (8 ஆம் மாடியில்) EGA எனவடையாளமிடப்பட்டதுமான அக்கூட்டாதனத் துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : இக்கூட்டாதனத் துண்டுக்கும் CE10 மற்றும் கூட்டாதனத்துண்டு EGB இன் திறந்த வெளிகளுக்கும் இடையேயான சுவரின் மத்தி; கிழக்கு : இக்கூட்டாதனத் துண்டுக்கும் CE4 (உயர்த்தி), CE5 (உயர்த்தி), CE32, CE24 (SW) மற்றும் CE7 இன் திறந்த வெளிக்கும் இடையேயான சுவரின் மத்தி ; தெற்கு: இக்கூட்டாதனத் துண்டுக்கும் CE6, CE8 மற்றும் CE9 இன் திறந்த வெளிகளுக்கும் இடையேயான சுவரின் மத்தி ; மேற்கு: பிரெட்ரிக்கா வீதியில் 1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், காணித்துண்டம் C1 ஐத் தனிவேறாக்குகின்றதுமான இக்கூட்டாதனத் துண்டின் சுவரின் மத்தி ; கீழ்ப்புள்ளி (அடி): SVA க்குமேல் இக்கூட்டாதனத் துண்டின் கொங்குறீற்றுத் தளத்தின் மத்தி ; உச்சப்புள்ளி (மேல்): மேலே கூட்டாதனத்துண்டு NIA இன் கொங்குறீற்றுத் தளத்தின் மத்தி.

1350 சதுர அடியாகவுள்ள 125.42 சதுர மீற்றர்களைக் கொண்ட தளப்பரப்பைக் கொண்டுள்ளது.

கூட்டாதனத்துண்டு EGA, வரவேற்பறை/சாப்பாட்டறை, தலைமைப் படுக்கையறை, 3 படுக்கையறைகள், பண்ட அறை, 3 மலசலகூடங்கள் மற்றும் மொட்டை மாடிகளைக் கொண்டுள்ளது.

கூட்டாதனத்தின் பொது அம்சங்களில் இக்கூட்டாதனத்துண்டு EGA க்கான பிரிக்கப்படாத பங்குப்பெறுமதி 2.29% ஆகவுள்ளது.

கூட்டாதனத்துண்டு EGAக்கான உடனடிப் பொது இடப்பரப்பு அணுகுகை CE32 ஆகவுள்ளது.

அத்துடன் கொழும்புப் காணிப்பதிவகத்தின் Con SPE 17/124 இல் பதிவுசெய்யப்பட்டது.

கீழே விபரிக்கப்பட்ட பொது அம்சங்களுடன் சேர்த்து.

கூட்டாதனத்தின் நியதிச்சட்டமுறையான பொது அம்சங்கள், 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் 12 ஆம் பிரிவினாலும் 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுச் சொத்தாண்மை (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுச் சொத்தாண்மைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவுள்ளன.

(அ) கூட்டாதனத்துடன் இணைந்துள்ள திறந்தவெளிகளுட்பட, கட்டிடம் எக்காணியின்மீது அமைந்துள்ளதோ அக்காணி.

(ஆ) கட்டிடத்தின் அத்திவாரங்கள், தூண்கள், பேருத்தரங்கள், உத்தரங்கள், ஆதாரங்கள், பிரதான சுவர்கள் மற்றும் கூரை.

(இ) மின்சாரம், தொலைபேசி, வானொலி, ரெடிபியூஷன், தொலைக்காட்சி, நீர்க்குழாய், நீர்த்தாங்கிகள், நீருக்கான கட்டுதொட்டி, மேந்தலை நீர்த்தாங்கிகள், பம்பிமனை, வடங்கள், கழிவுநீர்க்கால் குழாய்வழிகள் ஆளிறங்கும் வழிகள் மற்றும் குப்பைகள் அப்புறப்படுத்துகைகள் போன்ற மத்திய சேவைகளுக்கான நிறுவுகைகள்.

(ஈ) ஆதனத்தின் உளதாந்தன்மை, பேணுகை அல்லது காப்புக்கு அவசியமான அல்லது வசதியான வழமையாகப் பொதுப் பயன்பாட்டிலுள்ள அதன் வேறெல்லாப் பாகங்களும் வசதிகளும்.

ஏ. ஆர். பர்ணாந்து.
பொது முகாமையாளர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ.
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

9-622

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஈ எம் டீ கருணாரத்ன மற்றும் ஆர் ஜீ எஸ் ஜீ சமரவிக்ரம
கணக்கு இல. 1009 5010 7949

2017, யூன் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு -2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை , இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான ரம்யா அலஹேந்ர என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 3654 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஏக்கநாயக்க முதியன்சேலாகே தர்மவன்ச கருணாரத்ன மற்றும் ருபேசிங்ஹ கமச்சிகே சத்னா கயனி சமரவிக்ரம என்பவர்களில் கடன் பட்டார் என்ற வகையில் ஏக்கநாயக்க முதியன்சேலாகே தர்மவன்ச கருணாரத்ன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 3654 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில், சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் முப்பத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்தி எழுநூற்றி அறுபத்தி எட்டு ரூபா எழுபத்தி எழு சதம் (ரூபா 39,43,768.77) 2017, மே 12 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட முப்பத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்தி எழுநூற்றி அறுபத்தி எட்டு ரூபா எழுபத்தி ஏழு சதம் (ரூபா 39,43,768.77) 2017, மே 13 ஆந் திகதி முதல் இல. 3654 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முப்பத்தி எட்டு இலட்சத்து முந்நூற்றி தொண்ணூற்றி ஆறு ரூபா பதின் எட்டு சதம் (ரூபா 38,00,396.18) இத்துடன் மேவதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3654 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில்

விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவலை பிரதேச சபை எல்லைகளுக்குள் (அத்துருகிரியை உப எல்லைகள்) பல்லே பத்துவின் ஹேவாகம் கோரலே ஹோகந்தரை தெற்கு கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ராசப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 17/98 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு இலாட் 6B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எச். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1250 எனும் வரைபடத்தின் லொட் 4 (15 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்) ; கிழக்கு : கூறப்பட்ட இல. 1250 எனும் வரைபடத்தின் லொட் 7; தெற்கு : ஜயவிக்ரம வேரகொட உரிமம் கோரும் தெல்காஹாவத்த மற்றும்; மேற்கு : லொட் 6A ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்து அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 17/98 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 1227/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எச். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட 1991, ஒற்றோபர் 17ஆந் திகதி அசல் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1250 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 4 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிக் குழுமச் செயலாளர்.

9-546

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2017, யூலை 25 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:

"(கடன்பெறுநர்களான) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியாகவுள்ளதும், கொழும்பில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது மான வென்ச்சர் கார்கோ சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிடெட், மற்றும் வத்தளையைச் சேர்ந்த கதிரேஷன் கணேஷ் மெய்யப்பன் என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் நிறைவேற்றப்பட்டு பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஜீ. திசாநாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.06.19 ஆந் தேதிய 921 ஆம் இலக்க முறிமூலம் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையுமான ஆதனங்களினதும் வளவுகளினதும் பிணைப்பொறுப்புக் கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் / வசதிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவணைதவறியுள்ளாராதலாலும்.

அத்துடன் கீழே விவரிக்கப்பட்ட ஆதனங்களினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவுள்ள வென்ச்சர் கார்கோ சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிடெட், சொல்லப்பட்ட முறியின்கீழ் அதன் இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும். அத்துடன் 2017, யூன் 30 ஆந் தேதியன்றுள்ளவாறாக ஐந்து கோடியே எண்பது இலட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து ஐம்பத்தைந்து ரூபா பதினான்கு சதம் (ரூபா 5,80,54,055.14) கொண்ட தொகை செல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு சொல்லப்பட்ட ஐந்து கோடியே எண்பது இலட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து ஐம்பத்தைந்து ரூபா பதினான்கு சதம் (ரூபா 5,80,54,055.14) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான ஐந்து கோடியே இருபத்து எட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து நாற்பத்திரெண்டு ரூபா இருபது சதம் (ரூபா 5,28,71,042.20) கொண்ட கூட்டுமெத்தப் பிரதான தொகைமீது 2017, யூலை 01 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீத (26%) வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறியினால் சொல்லப்பட்ட கடன்களுக்கான/ வசதிகளுக்கான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களுக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து

மற்றும் அக்கறை உட்பட அவ்வாதனங்களும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமேன இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியூடவிலி ஹத்பத்துவவின் திரன்கன்தஹய கோறளையில் கட்டுனாவ கிராம அலுவலர் பிரிவினுள்ளும் குருநாகல் செயலகப் பிரிவினுள்ளும் வியூடவிலி வீதியில் குருநாகல் மாநகரசபை எல்லைகளினுள் அமைந்துள்ளதும் வதிமி வீதியில் 12C ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் அதன்மீதுள்ள கட்டிடத்துடன் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, ஓகத்து 9 ஆந் தேதிய 103/92 ஆம் இலக்க வரைபடத்தில் கந்தவத்த மறுபெயர் எஞ்சினேருவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் A எனவடையாளமிடப்படதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : வீதிக்காகத் தனிவேறாக் கப்பட்ட சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் B; கிழக்கு : 3121 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2; தெற்கு : ரத்நாயக்கவுக்குரிய 10 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளைத் தனிவேறாக்குகின்ற கம்பிவேலி ; மற்றும் மேற்கு : வதிமி வீதி; பரப்பளவில் இது, 10 பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டுள்ளதுடன், குருநாகல் காணிப்பதிவகத்தில் தொகுதி G 71/108 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சுசிறி ஏக்கநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, ஏப்பிறல் 17 ஆந் தேதிய 1308 ஆம் இலக்க அண்மைய வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது;

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியூடவிலி ஹத்பத்துவவின் திரன்கன்தஹய கோறளையில் கட்டுனாவ கிராமசேவை அலுவலர் பிரிவினுள்ளும் குருநாகல் செயலகப் பிரிவினுள்ளும் வியூடவிலி வீதியில் குருநாகல் மாநகரசபை எல்லைகளினுள் அமைந்துள்ளதும் வதிமி வீதியில் 12C ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் அதன்மீதுள்ள கட்டிடத்துடன் கந்தவத்த இப்போது க்ளப்வத்த மறுபெயர் எஞ்ஜினேருவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, ஓகத்து 9 ஆந் தேதிய 103/92 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A எனவும் காட்டப்பட்டதும் உ. நி., ஜீ. எஸ். கொரக்ககஹாகொட என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.10.03 ஆந் தேதிய 263 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 இன் மீள்நில அளவையாகவுள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சுசிறி ஏக்கநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, ஏப்பிறல் 17 ஆந் தேதிய 1308 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக் காட்டப்பட்டதும் காணித்துண்டம் 2 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு: காணித்துண்டம் 1 (அணுகுவழி) ; கிழக்கு : க்ளப்வத்த, 263 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டம் 2; தெற்கு : ரத்நாயக்காவிற்குரிய 10 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளைத் தனிவேறாக்கு கின்ற கம்பிவேலி மற்றும்; மேற்கு: வதிமி மாவத்தை; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1308 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்துப் பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டுள்ளது.

மின்சார வழங்கல் முறைமை, நீர்வழங்கல் முறைமை, தொலைத்தொடர்பு முறைமை என்பனவுட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் மேற்கூறப்பட்ட காணியுடனும் வளவு களுடனும் இணைந்துள்ள அசைவற்ற பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி, சாதனங்கள், இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவை தனித்தனியாகவும்.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

9-554

---

### செலான் வங்கி பீ.எல்.சீ

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனி சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (வீசேட ஏற்பாடுகள்) 04 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல்(விசேட ஏற்பாடுகள்) 08 ஆம் பிரிவின் கீழ் 2017.08.23 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

கிளை : குளியாபிட்டிய
கணக்கு இலக்கம் : 0440 - 31537820 - 001

“(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு இலக்கம் P.Q.9) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஆர். வீ. சீ. இராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 245 ஆம் இலக்க பிணை முறியின் கீழ் “ கடன் பெற்றவரான” குளியாபிட்டிய இலக்கம் 10/2400 என்ற இலக்கத்தின் கீழ் வியாபாரச் சான்றிதழின் கீழ் “ சீ.என். கிரியேஷன்” என்ற பெயரின் கீழான பாணியில் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் வியாபார உரிமையாளரான அசுரபுலிகே சமிந்த நிஷாந்த டீ சில்வா

